
# திராவிடத்தால் வாழ்கிறோம்

921

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

**தமிழ்.கா.அமுதரசன்**

16




# திருப்பம் தந்த மக்கள் மன்றம்!

கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுப் பூர்வமாக விவரிக்கும் தொடர்!

பொருளாதார அடிப்படையில் இட ஒதுக்கீடு என்கிற அரசாணை வெளிவந்த, அடுத்த ஒரு மாதத்தில், புதிய குழப்பத்துக்கு வித்திட்டார் எம்.ஜி.ஆர். 1979-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 5-ஆம் தேதி புதுக்கோட்டையில் நடைபெற்ற தந்தை பெரியாரின் நூற்றாண்டு விழாவில் பேசியவர், "தமிழ்நாட்டில் உயர்சாதி களைச் சேர்ந்த ஏழைகளுக்கும் இட ஒதுக்கீடு வழங்கப்படும்" என்று அறிவித்தார். அப்போது தான் "போராடுவதைத் தவிர தி.மு.கழகத்துக்கு வேறு வழியில்லை" என்றும் நகையாடினார். போராட்டங்கள் மேலும் தீவிரமடைந்தன.

"கொள்கையற்ற கொடியோர் கோலோச்சும் வரையில் தமிழ் மக்களுக்கு இப்படித்தான் மறைமுகமாகவும், நேரடியாகவும் மரணக்குழிகள் தோண்டப்படும் என்பதால், இந்த ஆட்சியையே மாற்றி அமைக்கும் பணியில் ஈடுபடுகிறோம்!

இரட்டைக் குழல் துப்பாக்கி என்றாரே, அண்ணா!

சமுதாய ரீதியில் திராவிடர் கழகம் களத்தில் இறங்குகிறது. தீமை பயக்கும் உத்தரவைத் தீயிட்டுப் பொசுக்க!

இப்படி உத்தரவிடுகிறவர்கள் ஆட்சியில் நீடித்தலாகாது - அகற்றப்பட வேண்டியவர்கள் என்று அரசியல் ரீதியில் நாம் களத்தில் இறங்குகிறோம்.

இருமுனைகளிலும் ஒருவருக்கொருவர் துணையாக நின்றும் நமது சமுதாயத்துக்கு வந்துள்ள பேராபத்தைத் தகர்த்தெறிய உறுதி மேற்கொள்வோம்" என அரசாணை எரிப்பு அறப்போராட்டத்துக்கு அறைகூவல் விடுத்தார் கலைஞர்.

"அரசாணையை எதிர்க்கட்சிகள் எரித்து, அதில் கிடைக்கும் சாம்பலை அரசுக்கு அனுப்புவதை, நாங்கள் வரவேற்கிறோம். அந்தச் சாம்பல்களை தலைமைச் செயலகத்தின் குரோட்டன்ஸ் செடிகளுக்கு உரமாகப் போடுவோம்" என்று நாவலர் சொன்னபோது, மக்களின் கோபம் உச்சத்துக்கே சென்றது.

### வே.ஆனைமுத்து அவர்களின் கோரிக்கை

எதிர்க்கட்சிகள் போராட்டங்களில் தீவிர மாக இருந்தபோது, மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமைக் கட்சியின் நிறுவனர் வே.ஆனைமுத்து அவர்கள், அந்த அரசா ணையை ரத்து செய்ய வேண்டும் என கோரிக்கை வைக்க, எம்.ஜி.ஆரிடம் நேரம் கேட்கிறார். "நீங்கள் நேரில் சொன்னாலும், 9 ஆயிரம் ரூபாய் என்பதை 12 ஆயிரம் என உயர்த்துவேனே தவிர, வருமான வரம்பு என்பதை நீக்க மாட்டேன்" என தொலைபேசியில் ஆனைமுத்துவிடம் கூறியிருக்கிறார் எம்.ஜி.ஆர்.

''கோரிக்கை மனுவை, கல்வி அமைச்சர் சி.அரங்கநாயகத்திடம் கொடுத்துவிட்டுச் செல்லுங்கள்" என்றார். நாங்கள் ஆவணத்தை அரங்கநாயகத்திடம் கொடுத்தபோது, 'நீங்கள் வாய்மொழியாகச் சொல்லுங்கள்' என்றார். அந்தக் கோரிக்கை மனு அரசாங்கத்தால் ஏற்கப்படவே இல்லை" எனப் பதிவு செய்கிறார் வே.ஆனைமுத்து.

### நீதிபதிகளின் மாறுபட்ட தீர்ப்பு

போராட்டம், கோரிக்கைகளுக்கு அசராத நிலையில், சட்ட வடிவத்திலும் அழுத்தம் கொடுக்கத் தொடங்கியது கழகம்.

அந்த உத்தரவுக்கு எதிராக, உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. கழக வழக்கறிஞர்கள் உதவியுடன் விக்ரமன் என்ற மீனவர் சமுதாய மாணவர் மற்றும் ரகுபதி என்கிற பிற்படுத்தப் பட்ட மாணவர் சார்பாக, சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டன.

'தமிழ்நாடு அரசின் ஆணை காரணமாக பொறியியல் கல்லூரியில் தங்களுக்குக் கிடைக்க வேண்டிய இடம் கிடைக்காமல் போய்விட்டது' என மனுவில் கூறியிருந்தனர்.

இந்த வழக்கு அவசர வழக்காக விசாரணைக்கு வந்தது. நீதிபதிகள் கோகுல கிருஷ்ணன், மோகன், ராமசாமி ஆகியோர் அடங்கிய அமர்வு விசாரணைக்கு எடுத்தது.

மூன்று நீதிபதிகளில் கோகுலகிருஷ்ணனும், மோகனும் பொருளாதார ரீதியாக இட ஒதுக்கீடு வழங்கும் அரசு ஆணை செல்லும் என்றும், நீதிபதி ராமசாமி மட்டும் செல்லாது என்றும் தீர்ப்பளித்தனர்.

அந்தத் தீர்ப்பு குறித்து, 'நெஞ்சுக்கு நீதி'யில் பதிவு செய்யும் கலைஞர் "முதல் இரண்டு நீதிபதிகளும் திராவிட இயக்கத்துடனே இணைந்து பயணித்தவர்கள். அவர்கள், சமூகநீதி அடிப்படையிலான இட ஒதுக்கீட்டுக்கு எதிராக அமைந்த அரசு ஆணை செல்லும் என தீர்ப்பளித்தது அதிர்ச்சியை அளித்தது" என குறிப்பிடுகிறார்.

> 1979-ஆம் ஆண்டு ஜூலை மாதத்துக்குப் பின்னரான 7 மாதங்களில் கழகத்தின் போராட்ட வடிவங்களே அந்த அச்சத்தை உருவாக்கின.

நீதிமன்றம் மாறுபாடான தீர்ப்பை அளித்தபோதிலும், மக்கள் மன்றத்தில் அரசாணையை மாற்றுவதற்கான முனைப்பில் ஈடுபட்டார் கலைஞர். அதற்குக் காலமும் வாய்ப்பளித்தது.

### மக்கள் மன்றத்தை வென்ற கழகம்

அத்தகைய சூழலில்தான் ஒன்றிய ஆட்சியில் இருந்த ஜனதா கட்சி கவிழ்ந்தது. உடனடியாக நாடாளுமன்றத் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டது. 1980-ஆம் ஆண்டு ஜனவரி 3 மற்றும் 6-ஆம் தேதிகளில் தேர்தல் நடைபெறும் என அறிவிப்பு வந்தது. அந்தத் தேர்தலின் முதன்மையான பேசுபொருள் இடஒதுக்கீட்டில் கொண்டு வந்த பொருளாதார அளவுகோல்தான். முக்கியமாக, கலைஞரின் தேர்தல் பிரச்சாரப் பயணங்களில் எல்லாம் பெரும் அனல் பறந்தது.

தேர்தலில் தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணி 55.89 சதவிகித வாக்குகளைப் பெற்று, தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 39 இடங்களில் 37 இடங்களைக் கைப்பற்றியது. கலைஞரின் மீது மக்கள் கொண்டிருந்த நம்பிக்கை அசைக்க முடியாதது என மீண்டும் உறுதி செய்யப்பட்டது. அதையடுத்து, தமிழ்நாட்டின் ஆட்சி நிர்வாகம் திசை மாறத் தொடங்கியது.

அதுவரை பொருளாதார அடிப்படையிலான இட ஒதுக்கீடு குறித்து, அழுத்தமாக இருந்த எம்.ஜி.ஆர். தேர்தல் தோல்விக்குப் பின் சுதாரிக்க முயற்சி செய்தார்.

தேர்தல் முடிவுகள் வெளியான இரண்டு வாரங்களுக்குள், 1980-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19-ஆம் தேதி அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி கருத்து கேட்பதற்கு இறங்கி வந்தார். அங்கு ஒருமித்த குரலாக 'பொருளாதார அடிப்படையில் இட ஒதுக்கீடு கூடாது; சாதி அடிப்படையில்தான் இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும்' என்கிற குரல் ஓங்கி ஒலித்தது.

### கழகம் தந்த எதிர்பாராத திருப்பம்

கூட்டம் முடிந்த இரண்டாவது நாளில், அதாவது ஜனவரி 21-ஆம் தேதி, அந்த அரசாணையை ரத்து செய்தார் எம்.ஜி.ஆர்., அடுத்த 10 நாட்களில் யாரும் எதிர்பாராத வகையில், மற்றும் ஒரு அறிவிப்பினை வெளியிட்டார். அதுதான் 68 சதவிகித இட ஒதுக்கீடு.

1980-ஆம் ஆண்டு பிப்ரவரி ஒன்றாம் தேதி, சமூகநலத் துறை சார்பில் வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி , தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இட ஒதுக்கீட்டின் அளவு 31 சதவிகிதத்தில் இருந்து 50 சதவிகிதமாக அதிகரிக்கப்பட்டது. அதையடுத்து, தமிழ்நாட்டின் மொத்த இட ஒதுக்கீடு அளவு 68 சதவிகிதமாக உயர்ந்தது.

தமிழ்நாட்டில் எந்த அரசியல் கட்சியும் கோரிக்கை விடுக்காத நிலையில், எவரிடமும் ஆலோசனை நடத்தாமலேயே பிற்படுத்தப் பட்டோர் இட ஒதுக்கீட்டினை 50 சதவிகிதமாக அதிகரித்தார் எம்.ஜி.ஆர்.

அதற்கு முக்கிய காரணம், பொருளாதார அடிப்படையிலான இட ஒதுக்கீடு ரத்து செய்யப்பட்டது, கழகத்தின் வெற்றியாக மாறிவிடக்கூடாது என்பது. மற்றொரு காரணம், அந்த ஆண்டு மே மாதம் நடைபெற இருந்த சட்டமன்றத் தேர்தல் குறித்த அச்சம். 1979-ஆம் ஆண்டு ஜூலை மாதத்துக்குப் பின்னரான 7 மாதங்களில் கழகத்தின் போராட்ட வடிவங்களே அந்த அச்சத்தை உருவாக்கின. அதுதான், இன்றைய 69 சதவிகித இடஒதுக்கீட்டை உறுதி செய்தது என்றால் மிகையில்லை.

...தொடரும்

## இந்தியாவை அழித்தது யார்?

"இந்தியாவை அழித்தது சனாதன தர்மமே" என்று தேசியவாத காங்கிரஸ் கட்சியின் எம்.எல்.ஏ. ஜிதேந்திர அவ்ஹாத், பா.ஜ.க. ஆட்சியாளர்களைச் சுட்டிக்காட்டி விமர்சனம் செய்துள்ளார். மாலேகான் குண்டுவெடிப்பு வழக்கில், பா.ஜ.க. முன்னாள் எம்.பி. பிரக்யா சிங் தாகூர் உள்ளிட்ட ஏழு பேரும் விடுதலை செய்யப்பட்டதை விமர்சித்து, செய்தியாளர்களிடம் பேசியிருந்தார். அதன் பின்னர், தனது எக்ஸ் தளத்தில் மீண்டும் விமர்சனம் செய்துள்ளார்.

"சனாதன தர்மம் இந்தியாவை நாசமாக்கிவிட்டது. சனாதன தர்மம் என்று எந்த மதமும் இருந்ததில்லை. இந்த சனாதன தர்மம்தான், நமது சத்ரபதி சிவாஜி மகாராஜாவின் முடிசூட்டு விழாவை மறுத்தது. இந்த சனாதன தர்மம், நமது சத்ரபதி சம்பாஜி மகாராஜை அவமதித்தது. இந்த சனாதன தர்மத்தைப் பின்பற்றுபவர்கள் ஜோதிராவ் பூலேவை படுகொலை செய்ய முயன்றனர். அவர்கள் சாவித்ரிபாய் பூலே மீது பசு சாணம் மற்றும் அழுக்கை வீசினர்" என்று பதிவிட்டுள்ளார்.

"இந்த சனாதன தர்மமே ஷாகு மகாராஜைக் கொல்ல சதி செய்தது. டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் தண்ணீர் குடிக்கவோ அல்லது பள்ளியில் சேரவோ கூட அனுமதிக்கவில்லை. இறுதியாக சனாதன தர்மத்திற்கு எதிராகக் கிளர்ந்தெழுந்தவர், மனுஸ்மிருதியை எரித்தவர், அதன் அடக்குமுறை மரபுகளை நிராகரித்தவர் பாபா சாகேப் அம்பேத்கர்தான். மனுஸ்மிருதியை உருவாக்கியவரே இந்த சனாதன மரபிலிருந்து தோன்றினார். சனாதன தர்மமும், சித்தாந்தமும் வக்கிரமானவை என்று வெளிப்படையாகச் சொல்ல ஒருவர் பயப்படக்கூடாது." என தனது எக்ஸ் தளப் பதிவில் பகிர்ந்துள்ளார். தமிழ்நாட்டில் தோன்றும் கருத்து எப்போதும் இந்தியா முழுக்க பரவும் என்பதற்கு இது மற்றுமொரு உதாரணம்.

## ஃப்ளாஷ்பேக்



## நெஞ்சை விட்டு அகலாத நினைவுகள்!



கமால் இளங்கோவன்

1985-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20-ஆம் தேதி, ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியத்தில், காடாச்சி கிராமத்தில் எனது இணையேற்பு விழா, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. என்னுடைய தந்தை அப்துல் காதர் அவர்கள் அன்றைய ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டக் கழகத்தின் துணைச் செயலாளராக இருந்து பணி யாற்றியவர். இந்த நிகழ்வில் கழக முன்னோடிகள் கோ.சி.மணி, மன்னை நாராயணசாமி, புதுக்கோட்டை பெரியண்ணன் ஆகியோர் பங்கேற்று சிறப்பித்தனர். அந்த நாள் நினைவுகள் நெஞ்சை விட்டு அகலாதவை.

– கமால் இளங்கோவன்,
வழக்கறிஞர் அணி மாவட்டத் தலைவர்,
தஞ்சை தெற்கு.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## நம் வரலாறு

### காங்கிரஸ்காரரர் காரில் கலைஞர்!

1963-ஆம் ஆண்டு டிசம்பர் 16-ஆம் தேதி மதுரையில் நடைபெற்ற, இந்தி எதிர்ப்பு சட்டநகல் எரிப்பு அறப்போராட்டத்துக்குத் தலைமைக் கழகத்தின் சார்பில் சென்றார் கலைஞர். மதுரைக்கு 50 மைல் தூரத்தில் கார் பழுதடைந்து நின்ற நிலையில், வழியில் வந்த காரில் ஏறி மதுரை வந்து சேர்ந்தார் கலைஞர். அவ்வாறு காரில் ஏற்றி, மதுரையில் இறக்கிவிட்டவர் மதுரை மாவட்டத்திலேயே மிகுந்த செல்வாக்கு படைத்த தீவிர காங்கிரஸ்காரரான பெருமாள்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131